VISIT…

அறிவு வந்தது!



பிரம்மதத்தன் காசியை ஆண்ட போது போதிசத்வர் கோசல மன்னனாகப் பிறந்தார். அவருக்கு சத்தியசேனன் என்ற மகன் பிறந்தான். அவனுக்குத் தக்க வயது வந்ததும் தந்தை அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டி சியாமளா என்ற அழகிய பெண்ணையும் மண முடித்து வைத்தார்.

ஆனால் சிறிது நாள்களுக்குப் பின் சத்தியசீலனைக் குஷ்டரோகம் என்ற பயங்கரப் பெரு வியாதி பிடித்தது. என்ன வைத்தியம் செய்தும் அது மறையவில்லை. எனவே எல்லார் கண்ணிலும் படாமல் தனியாகக் காட்டில் போய் ஒரு குடிசை போட்டுக் கொண்டு இருப்பது என சத்தியசேனன் தீர்மானித்துக் கொண்டான். அவன் தம் முடிவைத் தன் தந்தையிடமும் மனைவியிடமும் கூறினான். சியாமளாவோ தானும் அவனோடு காட்டிற்கு வருவதாக மிகவும் பிடிவாதமாகக் கூறினாள்.

யார் என்ன சொல்லியும் கேளாமல் சியாமளா தன் கணவனோடு காட்டிற்குச் சென்றாள். அங்கு வசதியான இடத்தில் குடிசை போடப்பட்டது. தினமும் அவள் தன் கணவனுக்குப் பணி விடைகள் செய்யலானாள்.

ஒரு நாள் காய்கறிகளைச் சேகரித்து விட்டு சற்று தூரத்தில் அழகாக விழுந்து கொண்டிருந்த அருவி நீரைப் பிடித்து வைத்து விட்டு அதில் குளித்து விட்டு வந்தாள். அப்போது அவள் மேனியில் புதிய மெருகு ஏறி மிகவும் கவர்ச்சிகரமாக விளங்கினாள்.

அவள் காய் கனிகளையும் நீரையும் எடுத்துக் கொண்டு திரும்புகையில் வழியில் ஒரு வேடன் அவளைப் பார்த்து அவளது அழகைக் கண்டு மதி இழந்து அவளது வழியை மறித்து `பெண்ணே! நீ மிக அழகாக இருக்கிறாய். என்னை மணந்து கொள்" என்றான்.அவளோ "முடியாது. வழியை விட்டு விலகு" எனவே அவன் அவளை பலவந்தமாகக் கட்டி இழுக்க முயன்றான். அப்போது அவள் குடுவையிலுள்ள நீரில் சிறிது எடுத்து அவன் மீது தெளிக்கவே அவன் அதே இடத்தில் விழுந்து துடிதுடித்து இறந்து போனான்.

வெகு நேரம் வெளியே போய் விட்டு வந்த தன் மனைவியிடம் சத்தியசேனன் "ஏன் இவ்வளவு நேரம்?" என்று கேட்கவே அவளும் நடந்ததை எல்லாம் கூறினாள்.

இதைக் கேட்டதும் சற்று நேரம் மௌனமாக இருந்து விட்டு அவளை நம்பாமல் "நீ உன் இஷ்டப்படி எங்கெங்கோ திரிகிறாய். உன்னைக் கட்டுப் படுத்த யாருமே இல்லை" என்றான்.

அது கேட்டு மனம் வருந்தி அவள் "நான் கொண்டு வந்துள்ள நீர் சக்தி வாய்ந்தது. என்பதும் நான் பதிவிரதை என்பதும் உண்மையானால் நான் உங்கள் மீது விடும் இந்த நீர் உங்களது பெரு வியாதியைப் போகட்டும்" என கூறி குடத்து நீரை அவன் மீது கொட்டி உடல் முழுவதும் நனையச் செய்தாள். மறு நிமிடமே அவனது பெரு வியாதி மறைந்து போயிற்று. அவன் தன் மனைவி கற்புக்கரசி என்று நினைத்து மகிழ்வதை விட தன் நோய் போனதற்காகவே மகிழ்ந்தான். உடனே அங்கிருந்து அவன் தலைநகருக்கு வந்தான்.

அவனது தந்தை அவனையும் சியாமளாவையும் வரவேற்று அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்.

தன் மகனின் நோய் எவ்வாறு குணமடைந்தது என்பதை அறிந்து கொண்ட கோசல மன்னர் தன் மகனை நாட்டின் மன்னனாக்கி சியாமளாவைப் பட்டத்து ராணியாக்கினார். பின்னர் அவர் துறவறம் மேற்கொண்டு கானகம் சென்றார். சத்தியசேனனோ சியாமளாவை மதிக்கவில்லை. அவன் தன் மற்ற மனைவிகளுடனேயே காலம் கழிக்கலானான். அரசனே ராணியை மதிக்காததால் மற்ற ராணிகளும் அவளை மதிக்கவில்லை. இதனால் மனம் நொந்து சியாமளா இளைத்துத் துரும்பானாள்.

ஒருமுறை துறவியான போதிசத்வர் தன் மகனையும் சியாமளாவையும் காண வந்தார். சியாமளாவின் நிலை கண்டு அவர் "ஏன் இப்படி இளைத்துத் துரும்பாகி விட்டாய்?" என்று கேட்டார். அவளும் "மனைவிக்குக் கணவன் மதிப்பு தராவிட்டால் அவளுக்கு சுகம் ஏது?" என்றாள். போதிசத்வர் நடந்ததையெல்லாம் அவளிடம் விவரமாக விசாரித்து அறிந்து கொண்டார். அவர் தன் மகன் சத்தியசேனனிடம் "மகனே! செய் நன்றி மறப்பது போன்ற மாபெரும் பாதகம் வேறெதுவும் இல்லை. உன் பயங்கர வியாதியின் காரணமாக நீ மனிதர்களின் மத்தியில் வாழ வெட்கப்பட்டு காட்டிற்குப் போனாய். அப்போது உன் மனைவி உன்னோடு இருந்து உனக்குப் பணி விடை புரிந்து முடிவில் உன் வியாதியையும் போக்கினாள். நீயோ மன்னனானதும் அவளை மதிக்கவில்லை. இது போன்ற நாடும் சுகபோகங்களும் யாருக்கு வேண்டுமானாலும் கிடைக்கும். ஆனால் கற்புக்கரசியான மனைவி ஒருவனுக்குக் கிடைக்க அவன் பாக்கியம் செய்திருக்க வேண்டும். எனவே சியாமளாவை நீ புறக்கணிக்காதே" என்று கூறினார்.

சத்தியசேனனின் அகக்கண்கள் திறந்தன. அவன் தன் மனைவியிடம் மன்னிப்பு கோரி அவளுக்கு முதலிடம் அளித்து கௌரவித்தான். அது முதல் மற்ற மனைவிகளும் அவளிடம் மரியாதை காட்டலானார்கள்.



வேதாளம் சொல்லும் கதை

சஞ்ஜீவனி மந்திரம்

25 □□□□ 2008

தன் முயற்சியில் சற்றும் தளராத விக்கிரமன் மரத்தில் ஏறி அதில் தொங்கிய உடலைக் கீழே வீழ்த்தினான். பின்னர் அவன் கீழேயிறங்கி, அதைத் தூக்கிக் கொண்டு மயானத்தை நோக்கிச் செல்லுகையில், அதனுள் இருந்த வேதாளம், "மன்னா! எத்தகைய உலக ஷேமத்திற்காக நீ இத்தகைய சிரமங்களை மேற்கொள்கிறாய் என்று தெரியவில்லை! உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? பிறருக்கு நன்மை செய்வதையே தங்களது நோக்கமாகக் கொண்டுள்ள சிலர், அத்தகைய வாய்ப்புகள் வரும் போது திடீரென்று என்ன காரணத்தினாலோ நிலைதவறி அந்த வாய்ப்புகளை தங்கள் சுய நலத்திற்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அப்படிப்பட்ட ஒருவனான மாதவனின் கதையை உனக்குக் கூறுகிறேன், கேள்" என்று கதை சொல்லலாயிற்று.

சஞ்ஜீவனி மந்திரம்



ரங்கபுரத்து ஜமீன்தார் கேசவன் தன் ஒரே மகனான ராகவனை மிகவும் செல்லம் கொடுத்து வளர்த்ததன் விளைவாக, சிறுபருவத்திலேயே அவன் பல கெட்டப் பழக்கங்களுக்கு அடிமையானான். ஜமீன்தார் எவ்வளவோ நயமாகச் சொல்லிப் பார்த்தும் அவன் திருந்தவில்லை. வளர்ந்ததும் அவனுக்குத் திருமணம் செய்து வைத்தால் பொறுப்பு வந்து திருந்தி விடுவான் என்று நினைத்த ஜமீன்தார், ஜானகி என்ற பெண்ணை அவனுக்கு மணமுடித்து வைத்தார்.

ஆனால், திருமணமான பின்னரும் ராகவன் திருந்தவில்லை. அவனுடைய மனைவி தங்கமான பெண்ணாக இருந்தாள். கணவனை தெய்வமாக மதித்து, அவனுக்கு சேவைகள் புரிந்து வந்தாள்.

திருமணமாகிப் பத்து ஆண்டுகள் ஆகியும், ராகவன் தம்பதியினருக்குக் குழந்தை பாக்கியம் ஏற்படவில்லை. அந்த சமயம், ஒருநாள் தயானந்தா என்ற யோகி அந்த கிராமத்திற்கு வந்தார். அவரிடம் சென்று ஜமீன்தார் தன் மகனைப் பற்றிக் கூறி அவனுக்குப் புத்திரபாக்கியம் அளிக்குமாறு வேண்டினார். அதற்கு யோகி, "கெட்டப் பழக்கங்களுக்கு அடிமையான உன் மகன் இன்று நலமாக இருப்பதற்கு உன் மருமகள் ஜானகியின் கவனிப்பும், சேவைகளுமே காரணம்! அவளுக்குக் குழந்தை பிறந்தால், அதன்பிறகு அவளால் கணவனை இப்போது போல் கவனித்துக் கொள்ள முடியாது. அதனால், அவன் உடல் நலம் கெடுவான்!" என்றார். "ஐயோ! அப்படியானால் என் வமிசம் ராகவனோடு அழிந்து விடுமா? என்று கேசவன் கலவரத்தோடுக் கேட்டார். "அப்படியில்லை! வமிச விருத்தி ஆக வேண்டுமென்று நினைத்தால், நான் உன் பொருட்டுக் கடவுளை வேண்ட முடியும்" என்றார்.

அவர் சரியென்றதும், உடனே, யோகி ஒரு கொய்யாப்பழத்தை அவரிடம் தந்து, "இதை உன் மருமகளிடம் தின்னக் கொடு! உனக்குக் கட்டாயம் பேரன் பிறப்பான்!" என்று சொல்லி விட்டு விடை பெற்றார்



மருமகள் ஜானகி அதை உண்ண, அடுத்த ஆண்டே அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்க, அதற்கு மாதவன் என்று பெயரிட்டனர். ராகவனும் தன் பிள்ளை முகங்கண்டு, தன் கெட்டப் பழக்கங்களை விடுத்துத் திருந்தலானான். ஆனால் அவனது கெட்டப் பழக்கங்களால் அவன் உடல் நலம் கெட ஆரம்பித்தது.

ஒருநாள் ஜமீன்தார் ஐந்து வயது நிரம்பியிருந்த தன் பேரனை அழைத்து, "குழந்தை! உன் அப்பா மிகவும் நல்லவர்தான் ஆனால் அவரது பழக்கங்கள் நல்லதல்ல. நீ அவரை நேசி ஆனால் பழக்கங்களை நேசிக்காதே" என்றார். அதற்கு மாதவன், "தாத்தா! அப்பா நோய்வாய்ப்பட்டு துன்பப்படுவதைப் பார்க்க என் மனது வேதனைப் படுகிறது. அவருடைய உடல் குணமாக என்னால் ஏதாவது செய்ய முடியுமா?" என்று கேட்டதும் நெகிழ்ந்து போன ஜமீன்தார், "என் கண்ணே! கடவுளைப் பிரார்த்தனை செய்! நிச்சயம் கடவுள் செவி சாய்ப்பார்!" என்றார்.

மாதவனும் தினமும் கடவுளைப் பிரார்த்தனை செய்யத் தொடங்கினான். பத்து ஆண்டுகள் சென்றன. ராகவனின் உடல்நலம் மோசமாகியதே தவிர குணமாகவேயில்லை. அப்போது, முன்பு கிராமத்திற்கு வந்த அதே யோகி தயானந்தா மீண்டும் அங்கு வந்தார். தனது அந்திமக் காலம் நெருங்கி விட்டதை உணர்ந்த அவர், தன் காலம் முடியும் முன், தனக்குத் தெரிந்த ஆன்மீக விஷயங்களை யாருக்காவது கற்றுத் தர விரும்பினார். அவருடைய ஞான திருஷ்டியில் மாதவன் அதற்குத் தகுதியானவன் என்று தெரிந்ததால் அவனைத் தேடி ரங்கபுரத்திற்கு வந்தார். யோகியை மாதவனும், அவனுடைய குடும்பத்தினரும் உபசாரம் செய்து வரவேற்றனர். தன் மனத்திலிருப்பதை யோகி மாதவனிடம் வெளியிட்டார்.

"சுவாமி! என் தந்தை குணமடையும் வரை என் மனம் வேறு எதிலும் நாட்டம் கொள்ளாது" என்றான் மாதவன்.



சற்றுநேரம் யோசித்த தயானந்தா, "சரி! அப்போது ஒன்றுசெய்! பத்ரிகாரண்யத்தில் உள்ள மகானந்தர் என்ற முனிவரை சந்திப்பாய்! அவருக்கு சில ஆண்டுகள் சேவை செய்து, அவரிடமிருந்து சஞ்ஜீவனி மந்திரத்தைக் கற்று வா! அதன் மூலம் உன் தந்தை குணமாவார்!" என்றார்.

உடனே, மாதவன் பத்ரிகாரண்யம் சென்று மகானந்தரை அடைந்து தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டான். முனிவரும் அவனைப் பற்றித் தெரிந்து கொண்டு, "மகனே! சஞ்ஜீவனி மந்திரத்தைக் கற்றுக் கொள்ள அசாத்திய உடலுழைப்பும், மன உறுதியும் தேவை! அது உன்னிடம் இருக்கிறதா என்று பரிசோதிக்க வேண்டும்" என்று மாதவனிடம் சில விரதங்கள் இருக்கும் படி கூறினார்.

முனிவர் கூறியபடி மாதவனும் விரதங்களைக் கடைப்பிடித்தான். அதை கண்டு மகிழ்ந்த மகானந்தர், ஒருநாள் "மகனே! இங்கிருந்து கிழக்குத் திசையில் கரடிக் குகை என்று ஒன்று உள்ளது. அங்கு சில மூலிகைச் செடிகள் காணப்படும். அவற்றை எடுத்து வா! அந்தக் குகையில் ஒரு மலைப்பாம்பு வசிக்கிறது! எச்சரிக்கை!" என்று செல்லி அனுப்பினார்.

மாதவன் அவ்வாறே கரடிக் குகைக்குச் சென்று மூலிகைகளைப் பறித்தான். அவனைக் கண்டதும் சுருண்டு படுத்திருந்த மலைப்பாம்பு அவனைப் பிடிக்க வந்தது. ஆனால், அதனிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் விரைவாகத் தன் வேலையை முடித்துக் கொண்டு திரும்பினான் மகானந்தர் அந்த மூலிகைகளை ஒரு கமண்டலத்தில் இட்டார்.

பிறகு, "இங்கிருந்து வடக்கில் பேய்காடு என்ற அடர்ந்த வனம் உள்ளது. வனத்தின் நடுவில் ஒரு மிகப் பெரிய ஆலமரம் உள்ளது. ஆலமரத்தின் நிழலில் சில அபூர்வ மூலிகைகள் உள்ளன. அவற்றை எடுத்து வா! அங்கு பிசாசுகள் உள்ளன! எச்சரிக்கை!" என்றார்.

உடனே, மாதவன் பேய்காட்டில் உள்ள ஆலமரத்தை அடைந்தான். அவன் சென்ற போது, ஆலமரத்தில் பிசாசுகள் கும்மாளமடித்துக் கொண்டு இருந்தன. பகலில் ஆடிப்பாடி ஆர்ப்பாட்டம் செய்த அவற்றின் கொண்டாட்டம் நடு இரவு வரைத் தொடர்ந்தது. பின்னர் அவை உறங்கத் தொடங்கியவுடன், சத்தமின்றி மூலிகைகளைப் பறித்துக் கொண்டு மாதவன் திரும்பினான். மகானந்தர், அந்த மூலிகைகளையும் அதே கமண்டலத்தில் போட்டார்.



அடுத்ததாக அவன் காட்டிலுள்ள முதலைக் குளத்திற்குச் சென்று, அங்கு நடமாடும் முதலைகளிடம் சிக்காமல், குளத்து நீரில் வளர்ந்திருந்த அவர் குறிப்பிட்ட சில மூலிகைகளையும் கொண்டு வந்தான். அவற்றையும் அவர் கமண்டலத்தில் இட்டார். பிறகு அதில் நீர் ஊற்றினார். அதன்பிறகு அவனை நோக்கி, "நீ சஞ்ஜீவனி மந்திரத்தைக் கற்கத் தகுதியானவன்தான்!" என்று சொல்லி அதை உபதேசம் செய்தார். பிறகு, "மகனே! இந்த கமண்டலத்திலுள்ள மூலிகை நீரை எடுத்துச் செல்! அதை உன் தந்தைக்குப் பருகக் கொடுத்து, சஞ்ஜீவனி மந்திரத்தை உச்சரிப்பாய்! உடனே, உன் தந்தை குணமாகி விடுவார். ஆனால், இதை ஒரேயொரு முறை ஒருவருக்குத்தான் உபயோகிக்க முடியும். அவருக்குப் பதிலாக, நீ அதை அருந்தினால் உனக்கு சம்பூர்ண ஞானம் உண்டாகும். அவை உலக நன்மைக்குப் பயன்படும்!" என்று கூறினார். "நன்றி, சுவாமி! ஆனால் இதை என் தந்தைக்குத்தான் பயன்படுத்துவதாக இருக்கிறேன்!" என்று கூறி அவரை வணங்கி மாதவன் விடை பெற, "நீ விரும்புவது கட்டாயம் நடக்கும்!" என்று அவர் அவனை வாழ்த்தினார்.

தன் வீட்டை அடையுமுன், யோகி தயானந்தாரிடம் சென்று அவருக்கு நன்றி கூற, அவர் "மாதவா! நீ வெற்றியுடன் திரும்பியது கண்டு மகிழ்ச்சி! நாளை சூரியோதயத்திற்குள் நான் இறந்து விடுவேன். ஆகையால் என்னிடம் இருந்து முடிந்தளவு நீ கற்றுக் கொள்" என்றார்.

மாதவனும் `சரி'யென்று கூற அவர் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார். நள்ளிரவானதும் மாதவன், அவரிடம் "சுவாமி உங்களிடம் இருந்து அனைத்தையும் கற்க விரும்புகிறேன். அதற்கு ஏதேனும் வழி இருக்கிறதா!" என்று கேட்டான். அதற்கு அவர், "உன்னிடத்தில்உள்ள கமண்டல நீரை எனக்கு அருந்தக் கொடுத்து, சஞ்ஜீவனி மந்திரத்தை உச்சரித்தால், நான் பல ஆண்டுகள் வாழ்வேன்!" என்றார்.

உடனே மாதவன் கமண்டல நீரை அவருக்குஅளித்து, மந்திரம் ஓத, அவரும் புத்துயிர் பெற்றார். 4

அவரிடம் இருந்து முழுவதையும் கற்றுக் கொண்டபின், ஊருக்குத் திரும்பிய மாதவனுக்கு ஒரு பேராச்சரியம் காத்திருந்தது. அவனுடைய தந்தை சஞ்ஜீவனி மந்திரத்தின் உதவிஇன்றியே பூரண குணம் அடைந்து இருந்தார்.

இந்த இடத்தில் கதையை நிறுத்திய வேதாளம், "மன்னா! முனிவர் மாதவனிடம் அந்த மந்திரத்தை தனக்காகக் கூறினால் உலகிற்கு நன்மை உண்டாகும், என்று கூறியதும் அவன் அதற்கு மறுத்துவிட்டான். ஆனால் அதன்பிறகு அவன் தான் நிறையக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று அதைப் பயன்படுத்தினான். இது சுயநலமில்லாமல் வேறு என்ன? தயானந்தர் தந்திரமாக தனது ஆயுளை நீட்டிக் கொண்டார். சஞ்ஜீவனி மந்திரத்தை உபயோகிக்காமல் மாதவனின் தந்தை எவ்வாறு குணம்அடைந்தார்? எனது இந்த சந்தேகங்களுக்கு விடை தெரிந்து இருந்தும் பதில் கூறாமல் இருந்தால் உனது தலை வெடித்து சுக்கு நூறாகி விடும்" என்றது.

அதற்கு விக்கிரமன், "சஞ்ஜீவனி மந்திரத்தை தனக்காக உபயோகித்துக் கொள்ள மாட்டேன் என்று மாதவன் சத்தியம் செய்தது உண்மைதான். கடைசி வரை அவன் அதைத்தான் கடைப்பிடித்தான். ஆனால் தயானந்தரின் அறிவுரைக்குப் பின் சஞ்ஜீவனி மந்திரத்தை உலக நன்மைக்காகப் பயன்படுத்துவதே நல்லது என்று உணர்ந்து தயானந்தருக்காக உபயோகித்தான். இது சுயநலம் இல்லாததுதான். அதேபோல் தயானந்தர் மாதவனை தன் வசப்படுத்தி தனது ஆயுளைக் கூட்டிக் கொண்டார் என்று கூறுவதும் தவறு. ஏனென்றால் அவர் இறந்தபின்பும் அவரது ஞானத்தால் உலகத்திற்கு நன்மையே ஏற்படும். ராகவனின் உடல்நிலை முற்றிலும் குணமடைந்ததற்கான காரணம் அவனது மனைவியின் பதிவிரதைதான். அது மட்டும்அல்லாமல் மகானந்தர் மாதவனை "நீ விரும்புவது நடக்கும்" என்று வாழ்த்தினார். இதுவும் ராகவன் குணமடைய காரணமாகும்" என்றான்.

மன்னனின் மௌனம் கலைந்ததும் வேதாளம் தான் சுமந்து வந்த உடலுடன் மீண்டும் பறந்து சென்று முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது.